DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 193/2026

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சின்னதுரை |
| Father / Husband Name | வேலாயுதம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 21.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிலாவட்டம் கிராமத்தில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சாந்தகுமார் என்பவர் என்னுடைய பெரியம்மா மகன், எனக்கு அண்ணன். 27.10.2025 ம் தேதி காலை 7.30 மணியளவில் என்னுடைய அண்ணன் சாந்தகுமார் என்பவர் அவருடைய இருசக்கர வாகனத்தில் சிலாவட்டத்தில் இருந்து பெட்ரோல் போடுவதற்காக ஒழுப்பாக்கம் சென்றபோது சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற Innova Car மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். பின்னர் நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் அண்ணனுக்கு தலை, மார்பு பகுதி ஆகிய இடங்களில் அடிபட்டு இறந்திருந்தார். அவரது பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள், நான் சாட்சியாக இருந்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் அக்கா தகவல் சொன்னார். என் அக்கா தான் விபத்து பற்றி தகவல் சொன்னார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். இறந்த நபர் என்னுடைய அண்ணன் என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.